[1973 பிப்ரவரி 9

சுருளியாறு நீர் மின் திட்டம்.

*100. வினா—திரு பெ. செளந்தரபாண்டியன்: மாண்புமிகு மின் சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா?

(அ) மதுரை மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திலுள்ள சுருளி நீர் வீழ்ச்சியில் நீர் மின்சார நிலையம் ஒன்றை நிறுவும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டின் நான்காவது திட்டத்தில் சுருளியாறு புனல் மின் திட்டத்தைச் சேர்த்துக் கொள்ளத் திட்ட ஆணைக்குழு கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது. திட்டத்தின் தொடக்கப்பணிகளை எடுத்துக்கொள் கொள்ளவும் மாநில அரசிற்கு திட்ட ஆணைக்குழு அனுமதி வழங்கி யுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடுகளுக்குத் திட்ட ஆணைக்குழுவின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. இடையே, இந்த நீர் மின் திட்டத்தின் துவக்கப்பணிகள் தமிழக மின்வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. மு. சுருளிவேல்: சென்ற மாதம் 14-ந் தேதி அன்று இந்த சுருளி நீர் வீழ்ச்சியில் நீர் மின்சார நிலையம் நிறுவும் திட்டத்தை அமல் செய்யும் இடத்திற்குச் சென்று பார்த்தேன். அங்குள்ள தொழிலாளர் கள் வேலையில்லாமல் தாங்கள் ஊதியம் பெறுவதாக ஒரு குறைபாட் டினை பொறுப்புணர்ச்சியோடு கூறினார்கள். அதற்குக் காரணமாகக் கூறி யது பல்வேறு திட்டங்களைப் பார்க்க ஒரே மேல் அதிகாரி இருப்பதால் இத்திட்டத்தில் அவருடைய முழுக் கவனத்தையும் செலுத்த முடிய வில்லை. ஆகவே வேலை தாமதப்படுகிறது என்று கூறினார்கள். அந்தத் தண்ணீரில் மின்சாரம் உற்பத்தியான பிறகு வைகை அணைக்கு வரு வதற்குப் பதிலாக ராஜபாளையத்திற்குத் திருப்பி விடப்படுகிறது என்ற தவ றான பிரசாரத்தைத் திட்டமிட்டு சில பகுதியினர் அங்கு எழுப்பி வருகி றார்கள். எனவே அந்த மக்களின் நியாயமான பயத்தைப் போக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன்: தவறான பிரசாரத்தை நம்பத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி நேரம் ஒரு வழி யாக முடிவுற்றது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

வினா 69-க்கு போடப்பட்ட துணை வினாவிற்கான விடையைத் திருத்தி வருவாய்த்துறை அமைச்சர் அறிக்கை

(2) அமைச்சர் அறிக்கை.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : நேற்றைய தினம் நான் மது பானக் கடைகளில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற மது பானங்கள் விற்கப்படுகிறதா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு (வினா 69) பதில் சொல்லும்போது "இந்தியன் மேட் பாரின் லிக்கர் தான்" விற்கப் படுகிறது என்று சொன்னேன். விசாரித்ததில் இப்போது ஒன்றைத் தெரி வித்துக் கொள்கிறேன். நேற்று சொன்ன பதிலை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற மதுபானங்களும் கூட ஓரளவிற்கு விற்கப் படுகிறது என்று திருத்திக் கொள்கிறேன்.

(3) ஒற்றிவைப்புத் தீர்மானம்.

(அ) அடிசன் கம்பெனி கதவடைப்புக் குறித்து.

MR. DEPUTY SPEAKER :—I have also received notice of an adjournment motion from Dr. Hande to discuss a matter of urgent public importance i.e. dispute between the management and workers of Addison and Co. which had led to Lock-out in the factory.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, அடிசன் கம்பெனியில் மீண்டும் சில பிரச்சினைகள் வந் திருக்கின்ற காரணத்தால் இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து, அது குறித்து விவாதிக்க வேண்டுமென்று உங்கள் மூல மாகக் கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கம்பெனியில் ஏற்கெனவே 10 பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டு, அதற்குப் பிறகு முத்துக்கிருஷ்ணன் என்பவர் 18-1-1973 அன்று சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர் ஒரு இலாகாவில் வேலை செய்து கொண்டிருந்த போது, வேறு ஒரு இலாகா விற்குச் சென்று வேலை பாருங்கள் என்று..................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : "லாக்-அவுட்" செய்யப் பட்டிருப்பதால் அந்தப் பிரச்சினை எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந் தது என்பதைச் சொல்லவேண்டும்.

The honurable Member need not go into detais. அது ஒரு டிஸ்கஷன் மாதிரி ஆகிவிடும்.

டாக்டர் எச் வி. ஹாண்டே : லாக் அவுட் நடந்து இருக்கிறது என்பதைப் பற்றிப் பேசுவது என்றாலும், ஓரிரு கருத்துக்களைச் சொன்னால் அது அமைச் சர் அவர்கள் பதில் கூறுவதற்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தால் கூற விரும்புகிறேன். நான் 3 நிமிடங்களுக்கு மேல் எடுக்க மாட்டேன் முத்துக்கிருஷ்ணன் ஒரு இலாகாவில் வேலை செய்து கொண்டிருந்தபோது அவரை வேறு ஒரு இலாகாவிற்குச் சென்று வேலை செய்யுங்கள் என்று சொன்ன நேரத்தில், அவர் செய்து கொண்டிருக்கிற வேலையை முடித்து விட்டு அதற்குப் பிறகு அங்கே சென்று வேலைசெய்கிறேன் என்று சொன்னார் என்ற காரணத்திற்காக, மேனேஜ்மேண்ட்டாரால் சஸ்பெண்ட் செய்யப் பட்டார். இதையும் 10 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டதை எதிர்த்தும், போராட்டமாக ஸ்டிரைக்கில் ஈடுபட்டார்கள். அந்த ஸ்டிரைக்குக்குப் பிறகு, மேனேஜ்மெண்ட் லாக்-அவுட் செய்திருக்கிறார்கள்.

மு.ப. 10—